**நாவிதன்வெளி பிரதேச சபை**
**அம்பாரை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நாவிதன்வெளி பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை வேலைத்திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோக குழாய் விரிவாக்க வேலைகளுக்கு ரூபா 1,993,645 உத்தேச மதிப்பீட்டிற்கமைய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டு 2018 டிசம்பர் 31 இல் இவ் வேலைத்திட்டம் முடிவுறாதிருந்ததும் நிதிக்கூற்றில் இவ் உத்தேச மதிப்பீடு செலவினமாக கொண்டுவரப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டில் முற்பணபணமாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவேண்டும். | இது போன்ற தவறுகள் இனிவரும் காலங்களில் ஏற்படாது இருப்பதற்கான நடவடிக்கையானது எம்மால் மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | கூற்றுக்கள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்கான நடவடிக்கையானது தற்போது மெற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | ஆறு வைப்புக்கள் காலங்கடந்த வைப்புக்களாக காணப்பட்ட போதிலும் சபையினால் உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பான உரிய நடவடிக்கையானது எம்மால் தற்போது மேற்க்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதனை அறியத்தருகின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,684,198 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,179,304 தொகையாக இருந்தது

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | 2017 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| வாடகைகள் | 2,944,500 | 2,819,504 | 3,061,139 | 1,269,148 | 2,856,000 | 1,634,256 | 1,661,755 | 1,510,783 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 485,000 | 448,100 | 448,100 | 0 | 485,000 | 426,300 | 426,300 | 0 |
| ஏனைய வருமானம் | 6,987,500 | 4,456,400 | 5,092,144 | 1,035,611 | 6,592,000 | 5,939,969 | 4,268,615 | 1,671,354 |
| | 10,417,000 | 7,724,004 | 8,601,383 | 2,304,759 | 9,933,000 | 8,000,525 | 6,356,670 | 3,182,137 |

### 2.2.2 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2007 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியில் அறவிடப்படவேண்டிய ரூபா 1,234,304 தொகையான இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவையினை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிலுவைகளை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது கணக்குகளில் இருந்து சட்டப்படி பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இவர்களால் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் இத்திகதிவரை ரூபா.54,500.00 ஆன தொகையினை செலுத்தியுள்ளதுடன், தொடர்ந்தும் மத்தியஸ்தர் சபையின் ஊடாக மாதாந்தம் செலுத்திக்கொண்டிருக்கின்றனர் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க வேணடும். இருந்தும், பிரதேச சபையினால் 2013 நவம்பர் 22 ஆம் திகதி 05 விடயங்கள் தொடர்பில் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப் | உள்ளூராட்சி அமைச்சினால் 1988.08.23 ஆம் திகதியில் 520/7 எனும் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பகுதி IV(ஆ) பிரிவில் உள்ளூராட்சி அறிவித்தல் மூலம் வெளியிட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைச் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளுக்கமைவான நியமத் துணைவிதிகளில் 42 துணை விதிகளை 2018.09.17 ஆம் திகதி முதல் செயற்படும் வண்ணம் நாவிதன்வெளி பிரதேச சபை |

| | | |
|---|---|---|
| உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | படுத்தப்பட வேண்டும். | பிரிவில் செயற்படுத்துவதற்கு 2018.04.19 ஆம் திகதிய பொதுச் சபைக் கூட்டத்தின் 11 ஆம் இலக்கத் தீர்மானம் மூலம் அனுமதி பெறப்பட்டு அரச வர்த்தமானியில் பிரசூரிப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன். |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 05 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகளுக்கேற்ப செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயல்பாடுகள் தொடர்பிலான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எமது பிரதேச சபையினால் உப விதிகளின் பிரகாரம் 2017-2020 வரையான காலப்பகுதிக்கான 4 வருட அபிவிருத்தித் திட்டமானது தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை அறியத்தருகின்றேன். |

**(இ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 28 செயற்பாடுகளில் 04 செயற்பாடுகளுக்கு மாத்திரம் வருடாந்த பாதீட்டினூடாக ஏற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால், 24 செயற்பாடுகள் செயற்படுத்த முடியாதிருந்தது. | குறித்த செயல்திட்டத்தை நிறைவேற்ற நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | போதிய நிதி ஏற்பாடுகள் எமக்கு கிடைக்கும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கையானது எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |

**(ஈ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச சார்பற்ற நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டு பிரதேச சபையிடம் 2010 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்ட ரூபா 3 மில்லியன் பெறுமதியான திண்மக் கழிவகற்றல் நிலையமானது உரிய சாத்திய வள ஆய்வினை மேற்கொள்ளாது கோயிலுக்கு அருகாமையில் அமையக்கப்பட்டமையால் பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக 2017 யூலை 12 ஆம் திகதிவரை செயற்படாது விளைவற்றுக் காணப்பட்டிருந்தது. மேலும் இந் நிலையத்தை சுற்றி அமைக்கப்பட்டிருந்த சுற்றுவேலி மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட மின்சார இணைப்பு பொருத்துக்களும் களவாடப்பட்டிருந்தது. | குறித்த நிலையத்தினை பயன்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்காக 19 வகையான செயற்பாடுகளிற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு வரைக்கும் 05 நிலையான அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்கள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன. மேலும், சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் கூடுதலான வருமானங்களை ஈட்டிக்கொள்வதற்கான வரைபுகளை எமது சபையின் ஊடாக மேற்கொண்டு கூடுதலான அபிவிருத்தி இலக்குகளையும் அடையவும் எண்ணியுள்ளதுடன், அதற்கான ஒரு பொதுவான அளவீட்டுக்குறிகாட்டியினை உருவாக்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 324 வர்த்தக நிலையங்கள் மற்றும் 6,049 வீடுகள் மீது வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா.3,200,000 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது. | சோலைவரி அறிவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் ஆதனவரி அறவிடுவதற்கான சில பகுதிகளை வெளிப்படுத்தி பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனவரி அறவிடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன் |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரு வாகனங்கள் முறையே 2012 டிசம்பர் 19 ஆம் திகதியிலிருந்தும் மற்றும் 2018 ஒக்டோபர் 18 ஆம் திகதியிலிருந்தும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் சபையின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | வாகனங்களை வருடாநத் மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரைக்கமைவாக அகற்றுவதற்கான அல்லது திருத்தி மீளப் பயன்படுத்துவதற்கான சட்டப் படியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எம்மால் உரிய தொடர் நடவடிக்கையானது தற்போது மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதனை அறியத்தருகின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் இப் பதிவேடுகள்/ ஆவணங்கள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேணடும். | எமது பிரதேச சபையின் செயலாளரின் இடமாற்றம் தொடர்பாக ஏற்பட்ட சில தடங்கல் நிலை காரணமாகவே எம்மால் உரிய காலத்தில் நிதியாண்டிற்கான நிதிக்கூற்றினை சமர்ப்பிப்பதில் காலதாமதமானது ஏற்பட்டது என்பதுடன், இனிவரும் காலங்களில் இத்தவறுகள் ஏற்படாது இருப்பதற்கான நடவடிக்கையானது எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். |